https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கிருஷ்ணகிரி வட்டார நாட்டுப்புற மல்லிகை வேளாண்மையில் புழங்கு பொருட்கள்

**மா.உமா மகேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் கா.காந்தி,** தலைவர், தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்),
மல்லுப்பட்டி, பாலக்கோடு – 635805.

**ஆய்வுச் சுருக்கம்**

*நாட்டுப்புற மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற பொருட்களை புழங்கு பொருட்கள் என்கிறோம். கிருஷ்ணகிரி வட்டார மக்கள் மல்லிகை வேளாண்மையில் எந்த மாதிரியான புழங்கு பொருட்களை உபயோகித்துள்ளனர் என்பதையும், மல்லிகை வேளாண்மை இப்பகுதி மக்களின் எவ்வித முக்கிய பயிராக கருதப்படுகிறது என்பதை பற்றியும் இக்கட்டுரையில் தெளிவாக காணலாம்.*

**திறவுச் சொற்கள்**

*வேளாண்மை – மல்லிகை – புழங்கு பொருள் – கலப்பை – மண்வெட்டி – நாட்டுப்புறம் – சங்க இலக்கியம் – ஆதிகாலம் – மனிதன் – முல்லை – பழகுதல் – பண்பாடு — உழுதல்*

### *1.0. முன்னுரை*

*சங்ககாலம் முதல், தற்காலம் வரையில் நாட்டுப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு முக்கிய பங்கு வகிப்பது வேளாண்மை தொழிலாகும். இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம் என்பார்கள். இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள் வசிப்பது கிராமங்களிலேயே. அவர்களின் முதன்மையான தொழிலாக இருப்பதும் விவசாயமே என அறிய முடிகிறது. தற்கால வேளாண்மை பயிர்களில் முக்கிய தொழிலாகவும், பணப் பயிராகவும் இருப்பது மல்லிகை விவசாயம். மல்லிகைப் பூ பயிரிடுவதன் மூலம் அதிக வருவாயீட்ட முடிகிறது. இந்த மல்லிகைப் பூ விவசாயத்திற்கு மக்களின் புழங்கு பொருள்கள் பற்றிய தேவையினை எடுத்துரைக்கும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.*

### *2.0. வேளாண்மை*

*வேள் + ஆள் + மை – வேளாண்மை என்பதாகும். வேள் என்ற சொல்லுக்கு மண் என்றும், வேளாண்மை என்ற சொல்லுக்கு மண்ணை ஆளுதல், கொடை, ஈகை, உபகாரம், ஈகையும் விளிம்பும் என்னும் பொருளை சொற்பிறப்பியல் அகராதி குறிப்பிடுகிறது. ஆதிகால மனிதன் நாடோடியாக வாழ்ந்த காலத்தில் வேட்டையாடி தனக்குத் தேவையான உணவை தானே தேடிக்கொண்டான். பின்பு, வேட்டையாடுவதை விடுத்து, தானே உணவை உற்பத்திச் செய்ய தொடங்கினான். அப்போது தான் வேளாண்மைத் தோன்றியதாக உணர முடிகிறது.*

*வேளாண்மை செய்வதற்கு ஏற்ற நிலமாக இருப்பது மருத நிலமாகும். ஒவ்வொரு நாளும் உலகில் புதிய புதிய கண்டுபிடிப்புகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றதை நம்மால்*

உணர்ந்துகொள்ள முடிகிறது. மனித சமூகத்தில் எவ்வளவு நவீன மாற்றங்கள் நிகழ்ந்தாலும், இன்றும் மாறாத நிலையில் இருப்பது கிராமப்புற மக்களின் விவசாயமே என வலியுறுத்த முடிகிறது.

### 3.0. மல்லிகை

சங்க இலக்கியத்தில் கூறும் தொண்ணூற்று ஒன்பது வகை மலர்களில் முல்லைக் குடும்பத்தை சேர்ந்த மலராக மல்லிகையும் இடம்பெறுகிறது. இவை ஒரு நல்ல நறுமணம் வீசும் மலராகும். கிராமங்களில் மல்லிகையை குண்டு மல்லி, அடுக்கு மல்லி என்றும் கூறுவார்கள். மிதமான முதல் அதிக வெப்ப மண்டலங்களிலும் வளரும் மலராக இந்த மல்லிகை இனம் உண்டு என்பதை உணர முடிகிறது. இதில் பல இனங்கள் உண்டு. பிற செடிகளில் மீது பற்றியும், கொடிகளாகப் படர்ந்தும், திறந்த வெளியில் புதிராகவும் வளரும் தன்மையுடையது. அதன் தண்டுகள் நிமிர்ந்தும், பரவலாகவும், புதர் போன்றும், கொடிப் போன்று படர்ந்தும் வேறுபட்டு காணப்படும். மல்லிகைப் பூக்கள் வெண்மை நிறமாக, வட்ட வடிவமாகவும், அழகாகவும், பார்ப்பவர்களின் கண்களை பறிக்கும் விதத்திலும் குண்டாக முத்து போன்று காணப்படும். மேலும், தமிழ்மொழி அகராதி யில், மல்லிகை ஒரு பூச்செடி என்று கதிரைவேற்பபிள்ளை கூறுகிறார்.

மல்லிப் பேரினத்தைச் சார்ந்த இருநூற்றிற் கும் மேற்பட்ட மல்லிகை இனங்களில் மல்லிகையும் ஒன்றாகும். இப்பேரினம் பன்னாட்டு பூக்கும் தாவர மரபு நெறிமுறை குழுமத்தின் (AP iv) நான்காவது பதிப்பின் படி 3 முல்லைக் குடும்பத்திலுள்ள 29 பேரினங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளன. மல்லி என்பதன் பொருள் பருந்தது, உருண்டது, தடித்தது என்று பல்வேறு பொருள்களைத் தருகின்றன. இதன் காரணமாகவே அந்த அமைப்புக் கொண்ட மலருக்கு மல்லிகை என்று பெயரிட்டிருக்க முடியும். தமிழ் இலக்கியத்தில் முல்லை எனச் சுட்டப்படுவது ஒரு வகையான காட்டுமல்லிகை என்ற இனமாக இருப்பதை அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்கள் அதிரல் கொடியை மௌவர், குளவி, மல்லிகை முதலியவற்றினி ன்றும் வேறுபடுத்தியே கூறுகின்றன.

"செருந்தி அதிரல்" (குறிஞ். 75)

"அதிரல் பூத்த ஆடுகொடிப்
படாஅர்" (முல்லைப்பாட்டு, 51)

### 3.1. புழங்கு பொருள்

மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்கு பயன்படுத்தி வந்த பொருட் களே புழங்கு பொருட்கள். மக்கள் முதன்முதலில் இயற்கையில் கிடைத்த பொருட்களை வைத்து அவர்களின் தேவை களை பூர்த்தி செய்துக் கொண்டிருந்தனர். அதை வைத்து வேளாண்மை செய்ய தொடங்கினார்கள். மேலும், புழங்குதல் என்பதற்கு 'கையாளுதல்', 'பழகுதல்' எனத் திருமகள் அகராதி கூறுகிறது. பக்தவத்சல பாரதி புழங்கு பொருட்களை 'பண்பாட்டின் கண்ணாடி' என்கிறார். அதோடு, இயற்கை வளங்களைப் பண்பாட்டு படைப்புகளாக வும், கலைப்படைப்புகளாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடாகும். மேலும், மானுடக்குழு ஒன்றின் பொருள் நுட்பத்திறனும் புழங்கு பொருள் சார்ந்த கலைத் தொழில் வேலைப்பாடு அமைந்த பொருட்களும் அதன் பண்பாட்டில் அடங்குகின்றன என்கதை தேலூர்து குறிப்பிடுகின்றார்.

புழங்கு பொருள் பண்பாடு என்பது பண்டைக் கால மக்கள் தங்களின் நல்வாழ் வினை எப்படி வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய புழங்கு பொருட்கள் பெரிதும் துணைப்புரிகின்றன என்கிறார் ரெஜித்குமார். நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை ஆய்வு செய்தல் அதில் பெரும் பங்கு வகிப்பது இப்புழங்கு பொருட்களே என்பதை எடுத்துரைக்க முடிகிறது. மல்லிகை வேளாண் பொருட்களில் புழங்கு பொருள் எவ்வாறு துணைப்புரிகின்றது என்பதை தெளிவுப்படுத்துகிறது.

### 3.1.1. மல்லிகை வேளாண் கருவிகள்

ஏர்க்கலப்பை, மண்வெட்டி, கயிறு, கொத்து (சிறுமண்வெட்டி), துடைப்பம், கத்தரிக்கோல், கதிர் அரிவாள் போன்றவைகளாகும்.

### 3.2. ஏர்க்கலப்பை

விவசாயத்தின் அடையாளமாக மற்றும் விவசாயிகளின் நண்பனாக இருப்பது கலப்பை என்று கூறினால் மிகையாகாது. நிலத்தை உழுவதற்கு கலப்பை பயன்படுகிறது. இந்த கலப்பை பெரும்பான்மையாக வாகை மரத்தால் செய்யப்படுகிறது. மல்லிகைப் பூ செடியை நடுவதற்கு முன் கலப்பையினால் ஏர் உழுவதை,

ஏ அடி பாரக் கலப்பை யோடி என் தோழி
காளையிலே
அது பஞ்சவர்ண மொழியோடி
நான் தூர உழப் போறேன்

என்ற பாடலடிகளின் மூலம் ரெஜித்குமார் விவரிக்கிறார்.

நாட்டுப்புற மக்கள் கலப்பையை பல வகைகளில் பயன்படுத்துகின்றனர். அவை, மரக்கலப்பை, இரும்புக் கலப்பை, இரட்டை மோலி கலப்பை, கட்டைக் கலப்பை, கடிச்சுக்கலப்பை, சகடக் கலப்பை, முத்துக் கலப்பை என பல்வேறு வகை கலப்பைகள் காணப்படுகிறன்றன. கலப்பையினை கீழே படுக்க வைக்க வேண்டும், மறுதாண்டி செல்லக்கூடாது போன்ற நம்பிக்கைகள் இன்றைய அளவிலும் காணப்படுவதை அறிய முடிகிறது.

**“அகல உழுவதை விட ஆழ உழு”**

என்ற பழமொழி இன்றும் வழக்காறுகளில் உள்ளதைத் தெளிவுப்படுத்துகிறது.

ஏர்க்கலப்பை வேளாண் புழங்கு பொருளாக இருந்ததற்கான சான்றாக,

**“கார் கலந்தன்றால் புறவே உடன்**
**ஏர் பரந்தனவால் புனமே ஏர் கலந்து**
**தாது ஆர் பிரசும் மொய்ப்ப,**
**போது ஆர் கூந்தல் முயங்கினாள்**
**எம்மே”** (ஐங். 417)

என்ற சங்கஇலக்கிய நூலாகிய ஐங்குறுநூறுப் பாடல் குறிப்பிடுகிறது.

### 3.3. மண்வெட்டி

மண்ணை வெட்டிவதற்காக மண்வெட்டி பயன்படுகிறது. மண்வெட்டி வேளாண் தொழிலில் முக்கிய பங்கு வகிக்கிறது. இரும்பு தகட்டில் வெட்டி அதனை வளைந்து தட்டியாகவும், நீளமாகவும் செய்வர். அதன் கைப்பிடி மரத்தால் செய்து பயன்படுத்தப் படுகிறார்கள். மண்வெட்டியின் கைப்பிடி கட்டையாக அல்லது நீளமாக வளைந்துக் கொக்கி போன்று காணப்படுவதால் அதனை மண்வெட்டி, மம்பட்டி என்றும் வழக்காறுகளில் கூறுகின்றனர். மல்லிகைப்பூ செடியை நடுவதற்கு முன்பாக, மண்வெட்டி யால் குழித் தோண்டி பின்பு செடியை நடுவார்கள். மண்வெட்டியை தோளில் சுமந்து நீர் பாய்க்கச் செல்லுவதை,

**“வெள்ளிப் படியறுவி**
**வெடலைப் புள்ள கையறுவா**
**சொல்லி அடிச்சறுவி**
**சொழட்டு தடிநெல் கதிர**
**மம்புட்டிய தோளில் வச்ச**
**மடைதிறக்கப் போற சாமி**
**மடையைத் திறந்துவிடு**
**மஞ்ச நீராடி வாரோன”**

என்ற பாடல் மண்வெட்டியின் பயன்பாடு களை தெளிவுப்படுத்துகிறது. மண்வெட்டியின் முக்கியத்துவத்தை,

**“வியர்வை ஒழுக மண்வெட்டிப் பிடித்து**
**மாலைக் கோதாவில் குஸ்த்தி பிடிக்கும்**
(ஒடக்கு, 1999-11)

என்ற கவிதை மூலம் வேளாண் செய்யும் உழைப்பாளர்களின் வாழ்வியலை அறிய முடிகின்றது.

### 3.4. கயிறு

கயிறுகளில் பல வகைகள் உண்டு. தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் தேங்காய் மட்டையில் கயிறு தயாரிக்கப்படுகிறது. தேங்காய் மட்டையை தண்ணீரில் ஊற வைத்து, அதை அடித்து இராட்டில் இணைத்து கயிறுகளை செய்கின்றனர். கயிறு மனிதர்களின் வாழ்க்கையில் பெரும் பயன்பாட்டை பெற்று வருகின்றன. இது கூடையாக செய்வதற்கும், கால்மிதிக்கும் மிதியடியாக செய்வதற்கும், கயிறு கட்டிலாக செய்வதற்கும், பொருட்களை இணைத்து கட்டுவதற்கும் பயன்படுகின்றனர். செடி நடுவதற்கு முன்னர், கயிறு மூலம் செடி நடுவதற்காக அளவுகளை அளந்துகொள்வர். அதன் பின்பு அதாவது இரண்டு அடிக்கு ஒரு செடி நடுவு செய்வார்கள். அப்படி அளவீட்டு முறையில் மல்லிகைப்பூ செடி நடுவதற்கு கயிறு மிகவும் தேவையாக உள்ளது. கயிறு தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்பாட்டினை,

**“உரித்தபின் தண்ணீரில் ஊறும்**
**எடுத்தபின் அடிபடும்**
**நாருகளாய் மாறும்**
**மெத்தைகளாய் மிதிபடும் கட்டியிடும்**
**தொட்டில் கட்ட துணைவரும்**
**நீர் இறைக்க ஓடி வரும்**
**சாரங்களை கட்டும் அறுத்து**
**விட்டால்”** (வெள்ளைச் சுவர், 2009, 16)

என்ற கவிதையின் மூலம் எண்ணெய் காய்ச்சின் பயன்பாட்டினை கவிஞர் சுரதா தெளிவுப்படுத்துகிறார்.

### 3.5. கொத்து (சிறு மண்வெட்டி)

சிறு மண்வெட்டிக்கு கொத்து, கொத்துதல் தமிழ்மொழி அகராதி விளக்கி குறிப்பிடுகிறது. சிறுமண்வெட்டியாகிய கொத்து என்பதை கிராமங்களில் களக்கிட்டு என்று வட்டார வழக்கு மொழியாக கூறுவார்கள். இந்த கொத்து எனப்படும் சிறுமண்வெட்டி மூலம் மல்லிகைப்பூ செடிகளின் பக்கத்தில் தேவையற்று முளைத் திருக்கும் சிறு சிறு

செடிகள், புதர்கள் மற்றும் புற்களை எல்லாம் கொத்தி எடுக்க பயன் படுகிறது. வேளாண்மையில் களை எடுப்பதற் கான சிறந்த கருவியாக சிறுமண்வெட்டி இருக்கிறது. இவை, மண்வெட்டியை போல சிறிய அளவிலான இரும்பால் செய்யப்பட்ட கருவியாக இன்றும் வேளாண் மக்களால் பயன்படுத்தப்படுகிறது. இதன் கைப்பிடியா னது புளிய மரம், மாமரம் போன்ற மரங்களால் செய்யப்படுகிறது.

### 3.6. துடைப்பம்

தென்னங்கீற்றில் இருந்து கிழித்து எடுக்கப் படுவது துடைப்பம். இதை விளக்குமாறு என்றும் கூறுவார்கள். வீட்டின் தரையில் உள்ள தேவையற்ற குப்பைகளை நீக்கி சுத்தம் செய்வதற்கு பயன்படுகிறது. இது ஒவ்வொரு ஊரிலும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப் படுகிறது. விளக்குமாறு, தும்புத்தடி, வாரில் என்ற பெயர்களில் அழைக்கிறார்கள். மல்லிகைப்பூ செடி நீண்டு வளர்ந்த பின், ஒரு அளவிற்கு வெட்டிவிட்டு மீண்டும் வரும் அரும்புகள் சிறந்த உற்பத்தித்திறனை தருகின்றன. இவ்வாறு வெட்டிய செடிகள் இலைகள் கூட்டி எடுக்க துடைப்பம் பயன் படுகிறது. மனித சமூகத்திற்குத் தேவையான சிறந்த புழங்கு பொருளாக துடைப்பத்தை பயன்படுத்துகின்றனர். மேலும் இதனை,

**"தெருக்கூட்டும் பாடல்கள்**
**துடைப்பங்கள்"** *(அன்பாதவன், 2003, 9-5)*
**"விட்ட விட வயசான**
**வெளக்கமாறு ஒண்ணிருக்கு**
*(தமிழுக்கு நிறமுண்டு, 1997, 56)*

என்ற பாடலின் மூலம் உணர்த்தப் படுகின்றன.

### 3.7. கதிர் அரிவாள்

நெற்கதிர் மற்றும் இலை, செடி கொடிகளை அறுக்கவும், மல்லிகைப்பூ செடியில் நீண்டு வளர்ந்த இலைகளை அறுக்கவும் அரிவாள் பயன்படுகிறது. கதிர் அரிவாள் என்பது நெற்கதிர் மற்றும் பிற கதிர்களை அறுப்பத ற்காக பயன்படும் முக்கிய கருவியாகும்.

அரிவாளினை இரும்பு கம்பியினை உலையில் காய்த்துத் தட்டி, அதன் நுனியின் முன் பக்கம் வளைத்துச் சிறியதாகவும், பெரியதாக வும் செய்து, கூர்மைப்படுத்துவதற்கு அரத்தினைக் கொண்டு மேலிருந்து கீழாக தீட்டி, கருக்கு வெக்கப்படுகிறது. கருக்கு வைக்கப்பட்ட பகுதி கூர்மையாக இருக்கும். இதன் கைப்பிடி மரத்தால் செய்யப்படுகிறது.

"மடையான் மடையான் பூம்போடு
மடைக்கு ரெண்டு பூப்போடு
அரிவ முனைத் தீட்டுத் தாரேன்
அதுக்கு ரெண்டு பூப்போடு"

என்ற பாடல் வரிகள் அரிவாள் தீட்டப் படுவது பற்றி ரெஜித்குமார் குறிப்பிடுகிறார்.

### 4.0. முடிவுரை

வேளாண்மைத் தொழில் என்பது நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கையின் பெரும் அங்கமாக திகழ்ந்துள்ளதை அறிய முடிகிறது. தேவைக் காக மட்டும் இல்லாமல் பாரம்பரிய தொழில் முறையாகவும், மற்றவர்களுக்கு உதவும் மனதோடும், உலக மக்களின் பசியை போக்குவதற்காகவும் விவசாயம் இருந்துள் ளதை எடுத்துரைக்க முடிகிறது.

மல்லிகைப் பூ பயிரிடுதல் வியாபார முறையில் மக்களுக்கு பயன்படக் கூடிய, தற்கால விவசாய முறையாகும். அதற்கு தேவையான புழங்கு பொருட்கள் கலப்பை, மண்வெட்டி, சிறுமண்வெட்டி, துடைப்பம், கயிறு என்பதையும், நாட்டுப்புற மக்கள் தங்கள் தேவைகளுக்காகவும், நறுமணத்திற்கா கவும் பணத்திற்காகவும் மல்லிகையை எவ்வாறு பயிரிட்டு வேளாண்மையில் நவீன வளர்ச்சியை பெற்றுள்ளதை இவ்வாய்வுக் கட்டுரைத் தெளிவுப்படுத்துகிறது.

### சான்றாதாரங்கள்

1. அறிஞர் ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் உரையும் தொகுதி – 1, மணிவாசகர் பதிப்பகம், 31 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 800108.
2. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகராதி, ப.264
3. முனைவர் த.ரெஜித்குமார், புழங்கு பொருள் பண்பாடு, காவ்யா வெளியீடு, சென்னை – 024, 2023 (இரண்டாம் பதிப்பு)
4. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 31 சிங்கர் தெரு, பிராட்வே, சென்னை – 600 104, முதல் பதிப்பு, சூலை – 2023.
5. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு, சிதம்பரம் – 608001.
6. எஸ்.கௌமாரீஸ்வரி, பொருநராற்றுப் படை, ப.39
7. செ.கவிதா, சங்க இலக்கியத்தில் உழவுத்தொழில் சார் புழங்கு பொருட்கள்